முற்பகல் 11-30

3. 28—4—1993 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஒருவர், முன்பு பேரவையில் பேசியதாகக் குறிப்பிட்டுப் பேரவைத் தலைவர் தெரிவித்த கருத்து குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நாங்கள் வெளிநடப்புச் செய்த பிறகு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எங்களது மரியாதைக்குரிய மாநிலச் செயலாளர் திரு. வி. நல்லசிவம் அவர்கள் இந்த சட்டமன்றத்திலே மன்னிப்புக் கேட்டதாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று நீங்கள் எங்கோ போய்விட்டீர்கள் ; யாரோடு போனீர்கள் ; எங்கே போனீர்கள் என்றே தெரியவில்லை. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். நேற்று நான் முதலில் தெரிவித்தது தவறு என்று இந்தப் பேரவையிலே அறிவித்துவிட்டேன். (குறுக்கீடு) உட்காருங்கள் நான் சொல்லிவிடுகிறேன். நான் இந்தப் பேரவைக்கு அப்போதே சொல்லிவிட்டேன். நான் திரு. நல்லசிவம் என்று பார்த்தவுடன், அவருக்கு இருந்த பெருந்தன்மைகளை எல்லாம் பார்த்து, நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் நல்லசிவமாகத்தான் இருக்கவேண்டுமென்று நான் கருதி, முதலில் சொல்லிவிட்டேன். பின்னர், பழைய ரெகார்டுகளை எல்லாம் பார்த்தபோது, அவர் தற்போதைய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நல்லசிவம் அல்ல; அன்றைய தினம் சென்னிமலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. கே. ஆர். நல்லசிவம் என்று தெரிவித்தேன். அதைப் பேரவைக்கு நான் உடனேயே வந்து அறிவித்து விட்டேன். (குறுக்கீடு).

திரு. வே. தம்புசாமி : பத்திரிகையிலே கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் என்றுதான் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இல்லை என்று நான் அறிவித்து விட்டேன். அவர் இன்றையக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நல்லசிவம் அல்ல, சென்னிமலைத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு).

 28-4-1993 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஒருவர், முன்பு பேரவையில் பேசியதாகக் குறிப்பிட்டுப் பேரவைத் தலைவர் தெரிவித்த கருத்து குறித்து.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் நல்லசிவம் மிகவும் நல்லவர். அது எல்லோருக்கும் தெரியும். நல்லவர் இல்லாதவராக நீங்கள் ஆக்கிவிட வேண்டாம். (குறுக்கீடு).

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு சொன்னதால்தான் நான் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் சொல்லும் போது கேட்டுவிட்டுப் போயிருக்கிறீர்கள், அதற்குப் பின்னர் சற்று நேரத்தில் நான் என் அறைக்குப் போனதும் அந்தப் பழைய ரெக்கார்டுகளைப் பார்வையிட்டு, உடனே அது இன்றைய கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் நல்லசிவம் அல்ல, அவர் சென்னிமலைத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அன்றைய சென்னிமலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். நல்லசிவம் என்பதையும் நான் பேரவைக்கு அறிவித்து இருக்கிறேன். பேரவைக்கு நான் அறிவித்ததோடு அது முடிந்து விட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பழனி சாமி அவர்கள் ஏதோ ஒரு பிரச்சினை என்கிறார். (குறுக்கீடு) திரு. வே. தம்புசாமி.

4. 28—4—1993 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளி நடப்புச் செய்ததுகுறித்து அவை முன்னவர் அவையில் தெரிவித்த கருத்து குறித்து.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, அவை முன்னவர் அவர்கள், நாங்கள் வெளி நடப்பு செய்த போது, காங்கிரஸ் கட்சியோடு, காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைகள் முழுவதையும் ஏற்றுக் கொண்டு வெளி நடப்புச் செய்தோம் என்று அறிவித்தார். காங்கிரஸ் கட்சிக்கும் எங்களுக்கும் கொள்கை வேறுபாடுகள் உண்டு. அவர்கள் எடுக்கக்கூடிய எந்த முடிவுகளுக்கும் நாங்கள் உடன்பட்டவர்கள் அல்ல. தொடர்ந்து, அவர்களுடைய பொருளாதாரக் கொள்கையாக இருந்தாலும், அவர்கள் எடுக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் தொடர்ந்து நாங்கள் எதிர்த்து வந்திருக்கிறோம். இப்போது கூட, பாராளுமன்றத்திலே மானியக் கோரிக்கைகளை எதிர்த்து வாக்களிப்பது என்று சொல்லி, தேசிய இடதுசாரி முன்னணி கட்சிகள் முடிவு செய்திருக்கின்றன. ஆனால், சட்டமன்றத்திற்குள்